# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**ஆர்ப்பரித்த அலைகடலால்............**

**அமோக வெற்றி!!!!!!**

அன்பார்ந்த தோழர்களே,

ஒப்பந்த தொழிலாளர்கள், தங்களின் நியாயமான, பஞ்சப்படி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததால் வேலூர் மாவட்ட நிர்வாகம் 140 ஒப்பந்த ஊழியர்களையும் 01.08.2014 முதல் பணி நீக்கம் செய்தது. ஒப்பந்த தொழிலாளர் எனில் BSNL நிர்வாகத்தின் கொத்தடிமைகள். அவர்கள் நியாயமான கோரிக்கைகளை கூட எழுப்பக் கூடாது என்றும் அவ்வாறு கேட்டால் அவர்களின் வயிற்றில் அடிக்கவும் தயங்க மாட்டோம் என நிர்வாகம் செயல்பட்டது.

தாக்குண்டால் மண் புழுவும் துள்ளி எழும். நாங்கள் சாக்கடை புழுக்களல்ல. சரித்திரத்தின் சக்கரங்கள் எனக் கூறி வேலை நீக்கம் செய்யப்பட்ட தோழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 01.08.2014 முதல் 7 நாட்கள் வேலூரில் தொடர் உண்ணா விரதம் நடத்தப்பட்டது. மாநில அளவில் 05.08.2014 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 14.08.2014 அன்று மாவட்ட தலைநகர்களில் "பாடைகட்டி ஆர்ப்பாட்டம்" நடத்த அறைகூவல் விடப்பட்டது. ஆனால் மாநில நிர்வாகத்தின் வேண்டு கோளின் காரணமாக இந்த போராட்டம் கைவிடப்பட்டது. பிரச்சனையில் தலையிடுவதாக வாக்குறுதி கொடுத்த நிர்வாகம் அதனை நிறைவேற்றவில்லை. எனவே "பொறுமைக்கு பெருமை இல்லை. பொங்கி எழுவதில் தவறில்லை" என்ற முடிவிற்கு மாநில சங்கங்கள் வந்தன.

எனவே 15.09.2014 முதல் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா முன்னிலையில் மாநில உதவி செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், TNTCWU மாநில தலைவர் தோழர் M.முருகையா மற்றும் TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் ஆகியோர் கால வரையற்ற உண்ணா விரோத போராட்டத்தை மேற்கொள்வார்கள் எனவும், 16.09.2014 அன்று தமிழ் மாநிலம் முழுவதும் ஒப்பந்த தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் அன்றே தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன்பு பெருந்திரள் உண்ணா விரதம் என அறை கூவல் விடப்பட்டது. மாநில நிர்வாகம் அக்கறையற்ற தன்மையோடு, BSNL நிறுவனம் போட்டியை சந்திக்கக் கூடிய நேரத்தில் போராட்டங்கள் கூடாது என்றும், ஒப்பந்த தொழிலாளர் பிரச்சனையை BSNL ஊழியர் சங்கம் கையிலெடுக்கக் கூடாது எனவும் கடிதம் கொடுத்தது.

அதனை நிராகரித்த இரண்டு மாநில சங்கங்களும், திட்டமிட்ட படி நமது போராட்டம் நடைபெறும் என அறிவித்தனர். அதன் அடிப்படையில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் S.செல்லப்பா முன்னிலையில் மாநில உதவி செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், TNTCWU மாநில தலைவர் தோழர் M.முருகையா மற்றும் TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் ஆகியோர் 15.09.2014 முதல் கால வரையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலக மாவட்ட சங்க நிர்வாகிகள், சென்னை தொலை பேசி BSNL ஊழியர் சங்கம் மற்றும் ஒப்பந்த தொழிலாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் AIBDPA நிர்வாகிகள் மற்றும்

வேலூர் மாவட்ட நிரந்தர ஒப்பந்த தொழிலாளர்கள் நூற்றுக் கணக்கில் உடன் இருந்தனர். முதல் நாள் மாநில நிர்வாகம் ஒரு சம்பிரதாயமான பேச்சு வார்த்தையை நடத்தியது. நாம் நிராகரித்தோம். தோழர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கும் இடத்தில் இரவில் மின் விளக்குகளை மறுத்தது. அலுவலகத்தில் கீழ்தளத்தில் இருக்கும் கழிப்பறைகளை மூடி 'சீப்பை ஒளித்து வைத்து திருமணத்தை நிறுத்தப்' பார்த்தது.

16.09.2014 அன்று தமிழக தொலை தொடர்பு தொழிற்சங்க போராட்டத்தில் ஒரு மைல்கல்லாய் அமையப் போகிறது என்பதற்கு கட்டியம் கூறும் வகையில் தமிழகத்தின் குமரியில் துவங்கி நாடு முழுவதும் பேருந்துகளில் குமுறும் நெஞ்சங்களோடு ஒப்பந்த தொழிலாளர்களும், நிரந்தர ஊழியர்களும், ஆண்களும் பெண்களுமாய் ஆயிரமாயிரமாய் சென்னை நகரை நெருங்கின. காலை 06 மணி முதல் தலைமை பொது மேலாளர் அலுவலகம் நமது தோழர்களின் இருப்பிடமாய் மாறியது. தமிழகம் முழுவதும் இருந்து சுமார் 1500 தோழர்களும், சென்னை தொலைபேசி, ஓய்வூதியர்கள் என 200 தோழர்களும் என புதிய தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் ஒரு புதிய பூபாளம் படைத்தனர். அவர்களின் நெஞ்சக் குமுறல்கள் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறை எண்ணத்தை அதிர வைத்தன. அலுவலகமே காவல் துறையால் குவிக்கப்பட்டிருந்தது. எந்த அடக்குமுறைக்கும் அஞ்சிடோம் என செங்கொடி சிவக்க தோழர்கள் உறுதியுடன் நின்றனர்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில தலைவர் தோழர் P.சம்பத் அவர்கள் 1500க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற இந்த பெருந்திரள் உண்ணாவிரதத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். அதன் பின் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினரும், CITU மாநில தலைவருமான தோழர் A.சௌந்தரராஜன் அவர்கள் ஒப்பந்த ஊழியர் போராட்டங்களில் CITU சங்கம் துணையாக நிற்கும் என்று பலத்த கரவொலிக்கு இடையே சிறப்புரை நிகழ்த்தினார்.

மேலும் AIBSNLEA அகில இந்திய பொது செயலாளர் தோழர் பிரகலத் ராய், BSNL ஊழியர் சங்க அகில இந்திய துணைத்தலைவர் தோழர் புனிதா உதயகுமார், BSNLCCWF அகில இந்திய உதவி செயலாளர் தோழர் குமார், NFTE மாநில செயலாளர் தோழர் R.பட்டாபி, NFTE மாநில உதவி செயலாளர் தோழர் முரளி, AIBSNLEA மாநில செயலாளர் தோழர் N.வீரபாண்டியன், SNEA மாநில செயலாளர் தோழர் கோபிநாதன், சென்னை தொலைபேசி BSNL ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர் K.கோவிந்தராஜ், ஒப்பந்த தொழிலாளர் சங்க மாநில செயலாளர் தோழர் காசி, AIBDPA மாநில செயலாளர் தோழர் C.K.நரசிம்மன், அகில இந்திய துணைத்தலைவர் தோழர் ஆறுமுகம் உள்ளிட்ட தோழர்கள் தங்களின் உரையால் பங்கேற்ற தோழர்களுக்கு ஊக்கம் அளித்தனர்.

அலைகடலாய் ஆர்ப்பரித்த உள்ளங்களின் உண்மையை உணர்ந்த நிர்வாகம் ஒப்பந்த தொழிலாளர் பிரச்சனையை பேச நமது சங்க நிர்வாகிகளை அழைத்தது. பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டவர்கள்:

| நிர்வாக தரப்பு | ஊழியர் தரப்பு |
|---|---|
| திரு G.V.ரெட்டி CGM BSNL TN CIRCLE | **தோழர் S.செல்லப்பா CS BSNLEU** |
| திரு G.ரவி PGM FINANCE | தோழர் M.முருகையா CP TNTCWU |
| திரு P.சந்தோஷம் Sr.GM(CM) | தோழர் C.பழனிச்சாமி ACS BSNLEU |
| திரு.M.ரவி பாபு GM (HR) | தோழர் M.நாராயணசாமி ACS BSNLEU |
| திருமதி பூங்கொடி GM (BP&IT) | தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ACS BSNLEU |
| திரு P.V.கருணாநிதி GM (CFA) | |
| திரு G.மகேந்திர குமார் GM(EB) | |
| திரு M.சண்முகம் DGM (VIG) | |
| திரு M.ராஜி DGM(ADMN) | |

அன்றைய தினம் நடைபெற்ற இரண்டு கட்ட பேச்சு வார்த்தைக்கு பின் மாநில நிர்வாகம் வேலூர் மாவட்டத்தில் பணியில் இருந்து நீக்கப்பட்ட தோழர்களில் 85 தோழர்களை உடனடியாக பணிக்கு எடுத்துக் கொள்ளவும் மீதமுள்ள தோழர்களை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் பணிக்கு எடுத்துக் கொள்ளவும் ஏற்றுக் கொண்டது. மேலும் அனைத்து மாவட்டங்களிலும், ஒரே சீராக ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்சனையை கையாள அனைத்து உண்மையான முயற்சிகளையும் மேற்கொள்ளவும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையை பேசமாட்டோம் என்று சொன்ன நிர்வாகம் பேச்சு வார்த்தை நடத்தியதோடு இதற்கு மேலும் ஏதாவது பிரச்சனைகள் இருந்தென்றால் தீர்வு காண்பதற்கும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

இந்த மகத்தான் வெற்றிக்கு காரணம் நமது சங்கங்களின் சரியான நிலைபாடும், தலைவர்களின் கால வரையற்ற உண்ணா நோன்பும், ஊழியர்களின் அபாரமான ஆதரவும் தான். பாதிக்கப்பட்ட தோழர்களுக்கு ஆதரவாக தனது உடலை வருத்தி உண்ணா விரதத்தில் ஈடுபட்ட தலைவர்களுக்கும், அலை அலையாய் திரண்டு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து தோழர்களுக்கும், பிரச்சனையின் நியாயத்தை உணர்ந்து தீர்வு காண உதவிய தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் நமது வாழ்த்துக்களையும், நன்றியையும் உரித்தாக்குகிறோம்.

இந்த போராட்டத்தால் ஒப்பந்த ஊழியர் பிரச்சனையில் நாம் உறுதியாக தலையிடுவோம் என்பதை மாநில நிர்வாகம் புரிந்துக் கொண்டுள்ளது. தமிழகம் முழுவதும் இருந்து வந்த ஒப்பந்த ஊழியர்கள், சராசரியாக போக்கு வரத்திற்கு மட்டும் ரூபாய் 1,000/- செலவு செய்துள்ளனர் எனில் கலந்துக் கொண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்கள் பத்து லட்ச ரூபாய்க்கு மேல் செல்வு செய்துள்ளனர். இது போக வேலை நிறுத்தத்திற்கான சம்பளத்தையும் இழந்துள்ளனர். இந்த தியாகம் என்பது விதைக்கப்பட்டு உள்ளது. வருங்காலம் வளமாக இருக்க இந்த தியாகம் நிச்சயமாக உரமாக இருக்கும். அவர்களை மீண்டும் நன்றியோடு மாநில சங்கங்கள் பாராட்டுகின்றன
.

ஒன்றுபட்ட போராட்டமே நமது ஊழியர்களின் துயரோட்டும்.
இன்குலாப் ஜிந்தாபாத்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**C.வினோத்குமார்**
மாநில செயலாளர்
TNTCWU

**S.செல்லப்பா**
மாநில செயலாளர்
BSNLEU